Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் புதன்கிழமை, செப்டம்பர் 08, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 56

# பத்திரிகையாளர்களுக்கு முதல்-அமைச்சரின்

## பொது நிவாரண நிதியில் இருந்து வழங்கப்படும், குடும்ப நிதி ரூ.3 லட்சத்திலிருந்து ரூ.5 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும்

# நல வாரியம் அமைக்கப்படும் - அமைச்சர் சாமிநாதன்

சென்னை, செப் 08 2021: சட்டசபையில் அமைச்சர் சாமிநாதன் வெளியிட்ட அறிவிப்பில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாட்டில் முதல் முறையாக உழைக்கும் பத்திரிகையாளர்களை முன்களப் பணியாளர்களாக முதல்-அமைச்சர் அறிவித்து பெருமை சேர்த்துள்ளார்.

அதன் அடிப்படையில் உழைக்கும் பத்திரிகையாளருக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைத்து செவ்வனே செயல்படுத்த நல வாரிய உதவித் தொகைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் அளித்திடும் வகையில் பத்திரிகையாளர்கள் நல வாரியம் அமைக்கப்படும்.

பணி காலத்தில் இயற்கை எய்தும் பத்திரிகையாளர்களுக்கு முதல்-அமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்கப்படும், குடும்ப உதவி நிதி உயர்த்தப்படும். தற்போது குடும்ப நிதி ரூ.3 லட்சம் வரை வழங்கப்பட்டு வருகிறது. இந்த குடும்ப நிதி ரூ.3 லட்சத்திலிருந்து ரூ.5 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் பத்திரிகையாளர்களுக்கு





பயிற்சிகள் வழங்கப்படும். இளம் பத்திரிகையாளர்கள் உயர் கல்வி படிக்க அரசு நிதியுதவி அளிக்கப்படும். இந்திய அளவில் புகழ்பெற்ற இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் மாஸ் கம்யூனிகே□ஷன்ஸ், ஏசியன் காலேஜ் ஆப் ஜர்னலிசம் போன்ற பத்திரிகை சார்ந்த கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி படிக்கவும், பயிற்சி பெறவும் நிதியுதவி வழங்கப்படும்.

இதழியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்பு நிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும் பங்காற்றி வரும் ஒரு சிறந்த இதழியலாளருக்கு ஆண்டுதோறும் 'கலைஞர் எழுதுகோல் விருது' மற்றும் ரூ.5 லட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டு சான்றிதழும் வழங்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### கொரோனா பரவலை கருத்தில் கொண்டு ஒன்றிய அரசின் வழிகாட்டுதல்படியே விநாயகர் சதுர்த்தி விழாவுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது

# நிவாரணத் தொகை 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் - முதல்வர் மு.க.ஸ்டாலின்





சென்னை, செப்டம்பர் 08 2021: தமிழகத்தில் கொரோனா பரவல் கட்டுக்குள் வராததால் விநாயகர் சதுர்த்தி அன்று பொது இடங்களில் சிலைகள் வைத்து வழிபடுவதற்கு தமிழக அரசு தடை விதித்துள்ளது.

இதற்கு பாரதிய ஜனதா கட்சி, இந்து முன்னணி அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் விநாயகர் சதுர்த்தி விழாவுக்கு எப்போதும் போல் அனுமதி அளிக்க வேண்டும் என்று சட்டசபையில் பாரதிய ஜனதா உறுப்பினர்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இது தொடர்பாக கடந்த சில நாட்களுக்கு முன்பு பாரதிய ஜனதா உறுப்பினர் எம்.ஆர்.காந்தி விடுத்த கோரிக்கைக்கு இந்து அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு பதில் அளித்தார்.

அவர் கூறும்போது, கொரோனா பரவலை கருத்தில் கொண்டு ஒன்றிய அரசின் வழிகாட்டுதல்படியே விநாயகர் சதுர்த்தி விழாவுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது என்று விளக்கம் அளித்தார்.

இந்த நிலையில் இன்று சட்டசபையில் பாரதிய ஜனதா உறுப்பினர் நயினார் நாகேந்திரன் மீண்டும் மீண்டும் விநாயகர் சதுர்த்தி விழா தொடர்பாக கோரிக்கையை முன்வைத்தார்.

இது தொடர்பாக பேசிய அவர் பக்கத்து மாநிலங்களில் விநாயகர் சதுர்த்தி விழாவுக்கு தடை விதிக்கப்படாத நிலையில் தமிழகத்தில் மட்டும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதை ஏற்க முடியாது.

எனவே தமிழகத்திலும் எப்போதும் போல விநாயகர் சதுர்த்தி விழா நடைபெற அரசு அனுமதிக்க வேண்டும் என்றார்.

இதற்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் விளக்கம் அளித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

இங்கே உறுப்பினர் நயினார் நாகேந்திரன் விநாயகர் சதுர்த்தியையொட்டி, அதற்கு அனுமதி தர வேண்டுமென்று ஒரு கோரிக்கையை எடுத்து வைத்திருக்கிறார். நான் ஒரு விளக்கத்தை அவருக்கு மட்டுமல்ல; இந்த மன்றத்தில் இருக்கக்கூடிய அனைவருக்கும் ஏன், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைவருக்கும் தெரிவிக்க விரும்புகிறேன்.

கொரோனா நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்த, அதிகளவில் மக்கள் கூடுவதைத் தவிர்க்கத் தேவையான கட்டுப்பாடுகளை 30.9.2021 வரை தொடர்ந்து நடைமுறைப்படுத்த, ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகம் மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. நீதிமன்றமும் அதைத்தான் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறது.

கேரள மாநிலத்திலே, ஓணம் மற்றும் பக்ரீத் பண்டிகை கொண்டாட்டங்களுக்கு, அதிக அளவில் மக்கள் கூடுவதற்கு அனுமதி அளித்த காரணத்தினால் தான், அங்கே கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாகி இருக்கிறது.

தமிழ்நாட்டிலும் இன்று வரை கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை முழுமையாகத் தடுக்கப்படவில்லை; அங்கு மிங்கும் கொஞ்சம் இருக்கிறது. அந்த எண்ணிக்கை ஒரு நாளைக்கு 50 ஏறுகிறது; 50 குறைகிறது. இப்படி ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது.

ஆகவேதான், பொதுமக்களுடைய பாதுகாப்பு மற்றும் நலனைக் கருத்திலே கொண்டு, 15.9.2021 வரை அனைத்து சமய விழாக்களைக் கொண்டாட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இது விநாயகர் சதுர்த்தி விழாவிற்கும் பொருந்தும்.

பொது இடங்களில் விநாயகர் சதுர்த்தி உள்ளிட்ட சமய விழா கொண்டாட்டங்களுக்கு மட்டுமே கட்டுப்பாடுகளே தவிர, தனி நபர்களைப் பொறுத்தவரையில், கொரோனா பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்றி, தங்கள் இல்லங்களில் கொண்டாடலாம் என்று அரசு சார்பில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் மனதிலே கொண்டுதான் தடை விதிக்கப்பட்டிருக்கிறதே தவிர, யாரும் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம்.

அதையொட்டி, நான் இன்னொரு அறிவிப்பையும் நான் இங்கே வெளியிட விரும்புகிறேன்.

நமது மாநிலத்தில் மண்பாண்டத் தொழிலில் ஈடுபட்டு வரக்கூடிய சுமார் 12 ஆயிரம் மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு, மழைக் காலங்களில் தொழில் செய்ய இயலாத நிலையிலே, அவர்களுக்கு நிவாரணமாக 5 ஆயிரம் ரூபாய் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

இவர்களுள், சுமார் 3 ஆயிரம் தொழிலாளர்கள் திருவிழாக் காலங்களில் விநாயகர் சிலைகளைச் செய்யும் பணிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் கொரோனா நோய்த்தொற்றின் காரணமாக, பொது இடங்களில் விழாக்களைக் கொண்டாட தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், தங்களது தொழிலை மேற்கொள்ள இயலாத நிலையில், அவர்களது வாழ்வாதாரம் கூட பாதிக்கப்பட்டிருக்கிறது.

இதனையெல்லாம் இந்த அரசு கருத்திலேகொண்டு, இந்த 3 ஆயிரம் தொழிலாளர்களுக்கு மழைக்கால பாதிப்பு நிவாரணத் தொகை போக, கூடுதலாக மேலும் 5 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகையாக அளிக்கப்பட்டு, மொத்தம் 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். இவ்வாறு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

# கோவையில் மூன்று இடங்களில் புதிதாக மகளிர் காவல் நிலையம்

## மாவட்ட எஸ்.பி. செல்வநாகரத்தினம் தகவல்



கோவை, செப்டம்பர் 08 2021: கோவை மாவட்டம் சூலூர் போலீஸ் ஸ்டேசன் சார்பாக போலீசாரின் குடும்பத்தினர் மற்றும் பொதுமக்களுக்கு தடுப்பூசி செலுத்தும் முகாம் நடைபெற்றது.

இதில் 150 பேருக்கு தடுப்பூசிகள் போடப்பட்டது. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மாவட்ட போலீஸ் எஸ்.பி. செல்வநாகரத்தினம் முகமை தொடங்கி வைத்தார். பின்னர் அவர், சூலூர் போலீஸ் ஸ்டேஷனில் ஆய்வு செய்தார்.

இதையடுத்து அவர், நிருபர்களிடம் கூறும்போது

மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து பொதுமக்கள் மற்றும் காவல் துறையினரின் குடும்ப உறுப்பினர்களுக்கு தடுப்பூசி போடப்படுகிறது.

புறநகர் பகுதிகளில் குற்ற சம்பவங்களை தடுக்க கடந்த 4 மாதங்களாக 32 இரு சக்கர வாகன ரோந்து பணியும், 12 நான்கு சக்கர ரோந்து பணியும் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

இதன் காரணமாக குற்றங்கள் குறைக்கப்பட்டு உள்ளது. அதிகப்படியான குற்றங்கள் கண்டு பிடிக்கப் பட்டு உள்ளது. தொடர் கொள்ளைகளில் ஈடுபட்டவர்களிடம் இருந்து நகைகள் மீட்கப்பட்டுள்ளன.

கோவை மாவட்டத்தில் 2,600 இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உள்ளது. தொழிற்சாலைகள், நிறுவனங்களில் கேமராக்கள் பொருத்தப்பட்டு உள்ளதால் குற்றங்களை விரைவாக கண்டுபிடிக்க முடிகிறது.

எனவே பொதுமக்களும் சாலையை நோக்கி கேமராக்களை வைக்க வேண்டும்.

கோவை மாவட்டத்தில் விரைவில் 3 இடங்களில் மகளிர் போலீஸ் ஸ்டேசன் ஏற்படுத்தப்பட உள்ளது. வட மாநிலத்தவர்கள் குற்றச் செயலில் ஈடுபட்டால் உடனடியாக போலீஸ் நிலையத்தை தொடர்பு கொள்ள வேண்டும்.

மாநிலத்திலேயே முதல் முறையாக, கருமத்தம்பட்டியில் குட்கா உள்ளிட்ட போதை பொருட்களை பதுக்கிய வடமாநிலத் தவர் மீது குண்டர் சட்டம் போடப்பட்டுள்ளது.

வடமாநிலத்தவர்கள் பற்றிய தகவல்களை போலீஸ் நிலையங்களில் அவர்களை அழைத்து வரும் ஏஜெண்டுகள் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# சென்னையில், பிரபல திரைப்பட இசையமைப்பாளர் எஸ்.ஜெயகர் - தண்ணீர்புஷ்பம் திருமணத்தில், மா.பா. பாண்டியராஜன் மணமக்களை வாழ்த்தினார்



**சென்னை: சென்னையில், பிரபல திரைப்பட இசையமைப்பாளர் எஸ்.ஜெயகர் - தண்ணீர்புஷ்பம் (எ)கலா திருமணத்தில், முன்னாள் அமைச்சர் மா.பா.பாண்டியராஜன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.**

# கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான கல்விக் கடன் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.எஸ்.அனீஷ் சேகர் தலைமையில் மதுரை எம்.பி. சு.வெங்கடேசன் முன்னிலையில் நடைபெற்றது

மதுரை, செப்டம்பர் 08 2021: மதுரை மாவட்டம், கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான கல்விக் கடன் வழங்குவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.எஸ்.அனீஷ் சேகர் தலைமையில் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.எஸ்.அனீஷ் சேகர் தெரிவிக்கையில்:- மதுரை மாவட்டத்தில் 12-ஆம் வகுப்பு முடித்து உயர்கல்வி பயில செல்லும் மாணவ, மாணவியர்களுக்கு வழிகாட்டுவதற்கும், கல்விக் கடன் பெறுவது தொடர்பான வழிகாட்டுதலை வழங்குவதற்காகவும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கல்வித்துறை அதிகாரிகள் கலந்து கொண்ட ஆய்வுக் கூட்டத்தில், கல்விக் கடன் கோரும் மாணவ, மாணவியர்கள் அனைவருக்கும் தங்குதடையின்றி கல்விக் கடன் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளோம்.

நடப்பாண்டில், மதுரை மாவட்டத்தில் ரூபாய் 500 கோடி மதிப்பீட்டில் கல்விக் கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து இத்திட்டத்தை செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. கல்விக் கடன் பெறுவது தொடர்பான மாணவ, மாணவியர் உதவி மையம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அலுவலகத்தில் இந்த வாரம் முதல் செயல்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில், மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சு.வெங்கடேசன் அவர்கள் தெரிவிக்கையில்:- கடந்த ஜூன் மாதம் வரை 657 மாணவ, மாணவியர்கள் கல்விக் கடன் வேண்டி விண்ணப்பித்துள்ளனர். இதுவரை, ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் கல்விக் கடன் வழங்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் உள்ள 357 மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் தலா ஒரு ஆசிரியர் வீதம் 357 ஆசிரியர்கள் மாணவ, மாணவியர்களுக்கு கல்விக் கடன் பெறுவது தொடர்பான எழும் சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மதுரை மாவட்டத்தில் இந்த ஆண்டு அதிகளவில் கல்விக் கடன்கள் வழங்கும் வகையில் அனைத்து கல்லூரிகள் மற்றும் வங்கிகளில் கல்விக் கடன் பெறுவதற்கான வழிகாட்டும் விளம்பரப் பலகையினை வைத்திட அறிவுறுத்தியுள்ளோம். ஒவ்வொரு 10 நாட்களுக்கு ஒருமுறை மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். காரணமின்றி, கல்விக் கடன் விண்ணப்பங்களை நிராகரித்தால் வங்கி அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி முகமை (திட்ட அலுவலர்) அபிதா ஹனீப் முதன்மை கல்வி அலுவலர் சுவாமிநாதன் அவர்கள் மற்றும் முன்னோடி வங்கி மேலாளர் அனில் அவர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

புதன்கிழமை,
செப்டம்பர் 08, 2021

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கொத்தடிமைத் தொழிலாளர்கள் தொடர்பான புகார்களை தெரிவிக்கலாம் என டாக்டர் ஜெயசந்திர பானு ரெட்டி தகவல்

**கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு சட்டம் 1976 இன் கீழ் சென்னை தேனாம்பேட்டை தமிழ்நாடு கட்டுமான கழகத்தில் நிறுவப்பட்டுள்ள கட்டணமில்லா தொலைபேசி எண் 18004252650 என்ற எண்ணை தொடர்பு கொண்டு கொத்தடிமைத் தொழிலாளர்கள் தொடர்பான புகார்களை தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. தொழிலாளர் ஒழிப்பு தொடர்பான சட்ட உதவிகள் மற்றும் மீட்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உதவிகள் ஏதும் தேவைப்படின் மேற்படி கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு நிவாரணம் பெற்றுக் கொள்ளலாம் என டாக்டர் ஜெயசந்திர பானு ரெட்டி தெரிவித்துள்ளார்.**



**தேனி: தேனி மாவட்டம் பெரியகுளம் தென்கரை சிஎஸ்எஇ சர்ச்சில் மணமகன் தேவகுமார் மணமகள் நித்யாஆகியோர் திருமணத்தை பாஸ்டர் ஸ்டாலின் பிரபாகர் நடத்தி வைத்தார். உடன் முன்னாள் திமுக மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு துணை அமைப்பாளர் ஜீவா குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.**



**கோவை: கோவை கொரோனா தொற்று தீவிரமடைந்து வருவதையொட்டி கேரளா எல்லையான வாளையார் சோதனை சாவடியில் மாவட்ட கலெக்டர் சமீரன் ஆய்வு மேற்கொண்ட போது எடுத்த படம்.**



**தேனி: தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே கள்ளிப்பட்டியில் தொல். திருமாவளவன் 59 வது பிறந்தநாளை முன்னிட்டு சே வோரா முற்போக்கு மாணவர் அணி அமைப்பாளர் தலைமையில் பேரூர் கழக செயலாளர் இரட்டை மலை ரமேஷ் முன்னிலை வகித்து சிறப்பு அழைப்பாளர்கள் பி நாகரத்தினம் ,தமிழ்வாணன் ,ஆண்டவர் ,ஆண்டி ஆகியோர் சிறப்புரையாற்றினார். திமுக பிரதிநிதி எஸ் வி எம் மகேந்திரவர்மன் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இனியன், கள்ளி முருகன், மாநில மாவட்ட நகர ஒன்றிய கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டனர். அனைவரும் முக கவசம், சமூக இடைவெளி, கிருமி நாசினி கடைபிடிக்கப்பட்டது.**



**தேனி: தேனி மாவட்டம் தாமரைக்குளம் பேரூராட்சி அலுவலகத்தில் கொரோன தடுப்பூசி போடும் முகாம் நடைபெற்றது. முகாமில் தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் ராஜசேகர் மற்றும் பகவனந்தம் வட்டார சுகாதார மேற்பார்வையாளர். சுப்புராஜ் சுகாதார ஆய்வாளர். மருத்துவ அலுவர் ரகு கிராம சுகாதார செவிலியர் கலந்து கொண்டனர்.**

# மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகா இராயபாளையம் கிராமத்தில் ஊராட்சி மன்ற தலைவர் ஸ்ரீதர் தலைமையில் இலவச பொது மருத்துவ முகாம்

*மதுரை, செப்டம்பர் 08 2021:* மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகா இராயபாளையம் கிராமத்தில் வேலம்மாள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் ராயபாளையம் ஊராட்சி மன்றம் சார்பாக ராயபாளையம் ஊராட்சி மன்ற தலைவர் ஸ்ரீதர் தலைமையில் இலவச பொது மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்மருத்துவ முகாமில் ராயபாளையம் கிராம பொதுமக்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டு மருத்துவ பரிசோதனைகளை செய்து கொண்டனர். மருத்துவப் பரிசோதனை செய்து கொண்டபொதுமக்களுக்கு மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டன. இதில்



ஊராட்சி மன்ற துணை தலைவர் சுப்புலட்சுமிசெயலாளர் கௌசல்யாதன்னார்வலர் நாகேஸ்வரி மற்றும் மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.

# கடமலைக்குண்டு ஊராட்சியில் சாக்கடை அருகே தடுப்பு சுவர் அமைக்க கோரிக்கை

*வருஷநாடு, செப்டம்பர் 08 2021:* கடமலை மயிலை ஒன்றியம் கடமலைக்குண்டு ஊராட்சியில் குறிஞ்சி ஜவுளி ரெடிமேட்ஸ் அருகே உள்ள பிரிவில் மிக அகலம் மற்றும் ஆழமான சாக்கடை உள்ளது. வருஷநாடு மெயின் ரோட்டிலிருந்து அந்தத் தெருவுக்குள் பிரியும் பொழுது தடுப்பு சுவர் இல்லாததால் வாகனத்தில் வந்து செல்வோர் நிலை தடுமாறி கீழே விழும் நிலையும் ஏற்படுகிறது. இவ்வழியாக சென்றால் விநாயகர் கோவில் மேகமலை விஏஓ ஆபிஸ் பத்திர பதிவு அலுவலகம் தனியார் மருத்துவமனை என எப்போதும் பல கிராம மக்கள்



வந்து செல்லும் பரபரப்பான இந்த தெருவில் வருஷநாடு செல்லும் மெயின் ரோடு பிரிவில் மேலும் விபத்து நடக்கும் முன் சாக்கடையில் இருபுறமும் தடுப்புச்சுவர் அல்லது கைபிடி சுவர் கட்டிக்கொடுக்க வணிகர்களும் பொதுமக்களும் ஊராட்சி நிர்வாகத்திடம் கேட்டுக் கொள்கின்றனர்.

# மூலக்கடை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை மீண்டும் செயல்பட பொதுமக்கள் கோரிக்கை

*வருஷநாடு, செப்டம்பர் 08 2021:* மூலக்கடை ஊராட்சியை மையப்படுத்தி கால்நடை மருத்துவமனை கட்டப்பட்டு செயல்பட்டு வந்தது. இதனால் அப்பகுதியில் உள்ள முத்தாலம்பாறை சிறப் பாறை வண்ணாத்தி பாறை தாழையூத்து தொப்பையாபுரம் அருக வெளி ஆலந்தளிர் கருப்பையாபுரம் ஆகிய சுற்றுவட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பெரும்பாலும் கால்நடைகளை வளர்த்து வருகின்றனர். அவர்கள் அனைவரும் இந்த மருத்துவமனையில் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்து வந்தனர். ஆனால் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு எவ்வித காரணமுமின்றி கால்நடை மருத்துவமனை மூடப்பட்டதால் அப்பகுதியில் ஆடு மாடு கோழி பூனை நாய் என அனைத்தையும் கடமலைக்குண்டு ஊராட்சியில் செயல்படும் கால்நடை மருத்துவமனைக்கு தனியார் வாடகை வாகனம் மூலம் கொண்டு சென்று சிகிச்சை அளிக்கும் அவல நிலை உள்ளது. தற்போது



மழை காலங்களில் மர்ம நோய் தாக்குவதால் ஆடு மற்றும் கோழிகள் பறவைகள் இழந்து வருகின்றனஇதற்கான காரணம் இதுவரை தெளிவுபடுத்தவில்லை. தற்போது செயலற்ற நிலையில் காணப்படும் கால்நடை மருத்துவமனையில் தனிநபர் ஆக்கிரமிப்பு செய்து பந்தல் செட் அமைத்திருப்பது மேலும் வேதனை அளிக்கக்கூடிய விஷயம் எனவே இப்பகுதி பொதுமக்கள் ஆடு மாடு மேய்ப்பவர்கள் இன் நலனை கருத்தில் கொண்டு ஆக்கிரமிப்பை அகற்றி மீண்டும் கால்நடை மருத்துவமனை செயல்பட ஊராட்சி நிர்வாகம் தலையிட்டு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க இப்பகுதி கால்நடை வளர்ப்போர் மற்றும் பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை வைக்கின்றனர். மீண்டும் செயல்பாட்டுக்கு வருமா கால்நடை மருத்துவமனை என்ற கேள்விக் குறியில் சமூக ஆர்வலர்கள் உள்ளனர்.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

# வ உ சிதம்பரனார் 150-வது பிறந்த நாளை முன்னிட்டு தூத்துக்குடியில் சர்வதேச மகளிர் அணி மாவட்ட தலைவர் டாக்டர். ராஜலட்சுமி ராஜ்குமார் மாலை அணிவித்து மரியாதை செய்தார்

*தூத்துக்குடி, செப்டம்பர் 08 2021:* இந்திய சுதந்திர போராட்ட காலத்தின் போது வெள்ளையர்களை எதிர்த்து சுதேசி கப்பலோட்டிய தமிழன் வ உ சிதம்பரனார் 150வது பிறந்த நாளை முன்னிட்டு சர்வதேச உரிமைகள் கழக தூத்துக்குடி மாவட்ட தலைவர் டாக்டர். ராஜலட்சுமி ராஜ்குமார் தூத்துக்குடி பழைய மாநகராட்சியில் அமைந்துள்ள வ உ சிதம்பரனார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்பாளர் ராஜ்குமார். மாவட்ட பொருளாளர் உஷா



பெசி. மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர் நல்லசிவம். மாவட்ட மகளிரணி செயலாளர் பிரிசில்லா. மாவட்ட மருத்துவ செயலாளர் மாரிச்செல்வம். இணைச்செயலாளர் சுப்ரமணியன். ஆன்மீக அணி செயலாளர் பிரமநாயகம் உட்பட ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# வருசநாடு அருகே இறந்தவர்களின் சடலத்தை ஓடையில் புதைக்கும் நிலை

*வருஷநாடு செப்டம்பர் 08 2021:* கடமலை மயிலை ஒன்றியம் முறுக்கோடை ஊராட்சிக்குட்பட்ட எருமை சுனை கிராமத்தில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளது. இக்கிராமத்தில் யாரேனும் இறக்க நேரிட்டால் அவர்களை அருகில் உள்ள நீர் நிலைகள் உள்ள ஓடையில் புதைக்க வேண்டிய அவலநிலை உள்ளது. மேலும் மழைக்காலங்களில் நீர் வற்றிய பின் காத்திருந்து அடக்கம் செய்யப்பட்டு வருகின்றனர் சுடுகாடு கேட்டு இதற்கு முன் இருந்த ஊராட்சி நிர்வாகத்திடம் பலமுறை கடந்த பல ஆண்டுகளாகவே மனு கொடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. என்றும் வேதனையுடன் கூறுகின்றனர். எனவே ஆக்கிரமிப்புகளை அகற்றி சுடுகாட்டிற்கு தேவையான இடத்தை ஒதுக்கிக் கொடுக்க தற்போதைய ஊராட்சி நிர்வாகமும் மாவட்ட நிர்வாகமும் முன்வர வேண்டும் என இப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர். சுடுகாட்டிற்கு தேவையான இடத்தை இந்த கிராமத்தைச் சேர்ந்த தற்போதைய ஊராட்சி மன்ற தலைவர் குருவம்மாள் சங்கிலி நிறைவேற்றுவார்களா என்ற எதிர்பார்ப்பில் இப்பகுதி பொதுமக்கள் காத்திருக்கின்றனர். அவ்வாறு நிறைவேற்றினால் இந்த சாதனை தற்போதைய ஊராட்சி மன்ற தலைவரை சாரும் என சமூக ஆர்வலர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

# பெண் ஐபிஎஸ் அதிகாரிக்கு பாலியல் தொல்லை அளித்த வழக்கு விசாரணைக்காக விழுப்புரம் நீதிமன்றத்தில் முன்னாள் சிறப்பு டி.ஜி.பி மற்றும் செங்கல்பட்டு முன்னாள் எஸ்.பி., ஆகிய இருவரும் நேரில் ஆஜராகினர்

*விழுப்புரம், செப். 8 2021:* பெண் ஐபிஎஸ் அதிகாரிக்கு பாலியல் தொல்லை அளித்த வழக்கு விசாரணைக்காக விழுப்புரம் நீதிமன்றத்தில் முன்னாள் சிறப்பு டி.ஜி.பி மற்றும் செங்கல்பட்டு முன்னாள் எஸ்.பி., ஆகிய இருவரும் நேற்று நேரில் ஆஜராகினர். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி கோபிநாதன், இந்த வழக்கு விசாரணையை வரும் 14 ஆம் தேதிக்கு ஒத்தி வைத்து உத்தரவிட்டார்.

பெண் ஐ.பி.எஸ் அதிகாரிக்கு பாலியல் தொல்லை அளித்த சம்பவம் நடந்தது கள்ளக்குறிச்சி மாவட்டம் என்பதால், இந்த வழக்கை விசாரிக்க, விழுப்புரம் சி.பி.சி.ஐ.டி போலீசாருக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த வழக்கை வரும் டிசம்பர் மாதத்திற்குள் முடிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டது.

அதனடிப்படையில், முன்னாள் சிறப்பு டி.ஜி.பி மற்றும் செங்கல்பட்டு முன்னாள் எஸ்.பி ஆகியோர் மீது, விழுப்புரம் சி.பி.சி.ஐ.டி போலீசார் 4 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து, 400 பக்கங்கள் கொண்ட குற்றப் பத்திரிகையை, விழுப்புரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.

இதையடுத்து, இந்த வழக்கு விசாரணை விழுப்புரம் தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நேற்று நடைபெற்ற வழக்கு விசாரணையில், முன்னாள் சிறப்பு டி.ஜி.பி மற்றும் முன்னாள் எஸ்.பி ஆகிய இருவரும் நேரில் ஆஜராகினர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி கோபிநாதன் வழக்கு விசாரணையை வரும் 14ஆம் தேதிக்கு ஒத்தி வைத்து உத்தரவிட்டார்.

இந்த வழக்கிலிருந்து தன்னை விடுவிக்க வேண்டும் என்று முன்னாள் செங்கல்பட்டு எஸ்.பி தரப்பிலிருந்தும், இந்த வழக்கை விழுப்புரம் நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டிய முகாந்திரம் இல்லை என்று முன்னாள் சிறப்பு டி.ஜி.பி தரப்பிலிருந்தும் விழுப்புரம் நீதிமன்றத்தில் மனு அளிக்கப்பட்டு, அந்த மனு மீதான விசாரணை நடைபெற்று வருகிறது.

# வருஷநாடு மூலக்கடை ஊராட்சியில் தேங்கும் கழிவுநீரால் சுகாதார கேடு ஏற்பட வாய்ப்பு

*வருஷநாடு, செப்டம்பர் 08 2021:* மூலக்கடை ஊராட்சியில் காளியம்மன் கோவில் முன்பு உள்ள குடியிருப்பு பகுதிகளில் தார் சாலை மற்றும் வடிகால் சாக்கடை வசதி இல்லாததால் அப்பகுதி மக்கள் பயன்படுத்தும் நீர் மற்றும் கழிவுநீர் நடைபாதையில் தேங்கி துர்நாற்றம் வீசுகிறது. இதனால் அருகில் உள்ள காளியம்மன் கோவிலுக்கு வரும் பக்தர்களும் முகம் சுளிக்கின்றனர் நிலை ஏற்படுகிறது. இதனால் சுகாதாரக்கேடு ஏற்பட வாய்ப்பு உள்ளதாக அப்பகுதி பொதுமக்கள் கூறுகின்றனர். எனவே அப்பகுதி பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் நலன் கருத்தில்



கொண்டு அதில் பாதியில் நிறுத்தப்பட்ட சிமெண்ட் சாலையை இணைத்து வடிகால் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். என இப்பகுதி பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை வைக்கின்றனர்.

# முத்தியால்பேட்டை ஊராட்சி காஞ்சீபுரம் மாநகராட்சியுடன் இணைப்பதற்கு அரசு விலக்கு அளிக்க வேண்டும்: ஆர்.வி ரஞ்சித்குமார் தலைமையில் கிராம பொதுமக்கள் கலெக்டரிடம் கோரிக்கை மனு

*காஞ்சீபுரம், செப். 08 2021:* முத்தியால்பேட்டை ஊராட்சி காஞ்சீபுரம் மாநகராட்சியுடன் இணைப்பதற்கு அரசு விலக்கு அளிக்க வேண்டும் என முத்தியால்பேட்டை ஆர்.வி ரஞ்சித்குமார் தலைமையில் கிராம பொதுமக்கள் கலெக்டரிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

காஞ்சீபுரம் அருகே முத்தியால்பேட்டை ஊராட்சியை, காஞ்சீபுரம் மாநகராட்சியுடன் இணைக்காமல், கிராம ஊராட்சியாக செயல்பட வேண்டும் என, கிராம மக்கள் ஏராளமான பெண்கள் முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் முத்தியால்பேட்டை ஆர்.வி ரஞ்சித்குமார் தலைமையில் காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் குவிந்தனர்.





இதனைத் தொடர்ந்து முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் முத்தியால்பேட்டை ஆர்.வி ரஞ்சித்குமார் தலைமையில் 5 பேர் கலெக்டர் அலுவலகத்திற்கு சென்றனர். அப்போது முத்தியால்பேட்டை ஆர்.வி ரஞ்சித்குமார், மாவட்ட கலெக்டர் டாக்டர் மா. ஆர்த்தியை நேரில் சந்தித்து கோரிக்கை மனு வழங்கி பரீசிலனை செய்யுங்கள் என்று வேண்டி கொண்டார்.

அம்மனுவில் அவர்கள் கூறியதாவது: காஞ்சீபுரம் அடுத்த முத்தியால்பேட்டை ஊராட்சிகளில் உள்ள அனைத்து கிராமங்களையும் புதியதாக உருவாக்கப்படும் காஞ்சீபுரம் மாநகராட்சியுடன் இணைய இருப்பதாக அறிந்தோம். முத்தியால்பேட்டை ஊராட்சியில் மொத்த குடும்பங்கள் 1464 இதில் 1040 குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்க்கு கீழ் உள்ளவர்கள் இக்குடும்பத்தில் 2200 நபர்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் பணி செய்து வருகின்றனர்.

மேலும் இத்திட்டத்தின் கீழ் கிடைக்கும் வருமானத்தால் குடும்பம் நடத்தி தற்போது முத்தியால்பேட்டை ஊராட்சியை மாநகராட்சியுடன் இணைத்தால் அனைத்து குடும்பங்களும் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் மீண்டும் வறுமை நிலைக்கு தள்ளப்படுவார்கள். மக்கள் நலன் கருதி முத்தியால்பேட்டை ஊராட்சியை காஞ்சீபுரம் மாநகராட்சியுடன் இணைக்காமல் தற்போது உள்ள கிராம ஊராட்சியாக செயல்படுத்தி தருமாறு அம்மனுவில் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதில், கௌரிஅன்பழகன், அஞ்சலாட்சி, குன்னிம்மா, உமா, மல்லிகா, எல்லம்மா,திலகம் உள்பட 200க்கும் மேற்பட்ட கிராமத்து பொதுமக்கள் சமூக இடைவெளியுடன் முக கவசம் அணிந்து கலந்து கொண்டனர்.

ஹலோ மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# வேப்பூர் அருகிலுள்ள சிறுபாக்கம் கிராமத்தில் கிணற்றில் விழுந்து முதியவர் சாவு



**கடலூர், செப்டம்பர் 08 2021: கடலூர் மாவட்டம் வேப்பூர் அருகிலுள்ள சிறுபாக்கம் கிராமம், எஸ்,புதூர் சாலையில் ஆண்டவர் கோயில் அருகில் வசித்து வருபவர் மொட்டையன் மகன் பெரியசாமி (வயது 75) இவருக்கு சொந்தமான மோட்டார் கிணறுக்கு குளிக்கச் சென்ற போது கிணற்றில் தவறி விழுந்து இறந்து விட்டார். இதுபற்றி தகவல் அறிந்த சிறுப்பாக்கம் போலீசார் வழக்குப்பதிவு செய்து வேப்பூர் தீயணைப்பு துறை உதவியுடன் விரைந்து சென்று கிணற்றிலிருந்து பிரேதத்தை கைப்பற்றி விருதாச்சலம் அரசு மருத்துவமனைக்கு உடல் கூறு ஆய்விற்கு அனுப்பி வைத்து மேலும் விசாரணை செய்து வருகின்றனர்.**



**கன்னியாகுமரி: கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலை சேர்ந்த சாகுல்ஹமீது பாத்திமா தம்பதினர் ஓராண்டு வாழ்ந்த நிலையில் கருத்து வேறுப்பாட்டால் விவாகரத்து பெற்று பிரிந்து வாழ்ந்த நிலையில் தன்னுடன் வாழ்ந்த மகன் அல்டாப்பை (13) திடீரென வட்டக்கரையில் கணவரின் இரண்டாவது மனவி வீட்டில் விட்டு விட்டு தலைமறைவானார். அம்மாவை காணாத ஏக்கத்தில் மகன் மயங்கி விழுந்ததால் சாகுல் ஹமீது இரண்டாவது மனைவி போலீசாருக்கு தகவல் தெரிவித்தார் போலீசார் சிறுவனை மீட்டு அரசு மருத்துவக் கல்லூரியில் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் பாத்திமா சாகுல் ஹமீதை போலீசார் தேடி வருகின்றனர்.**





**கன்னியாகுமரி முருகன் குன்றம் அருகே லெமூரியா வர்மக்களரி அடிமுறை புதிய தற்காப்பு கலை பயிற்சி வகுப்புகளை திமுக தலைமை செயற்குழு உறுப்பினரும் ஒன்றியக் கழகச் செயலாளருமான என்_தாமரைபாரதி துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் லெமூரியா நிறுவனர் ஆசான் செல்வன் மற்றும் லெமூரியா இயக்குனர் ஆசான் திரு மதுரானந்தன், திமுக மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் திரு சுதன்மணி, ஒன்றிய விவசாய அணி துணை அமைப்பாளர் சுதன் (எ) சுயம்புத்துரை, திமுக நிர்வாகிகள் மோகன்ராஜ், பார்த்தசாரதி உட்பட மாணவர்கள் பெற்றோர்கள் திரளாக கலந்து கொண்டனர்.**



**திண்டுக்கல்: திண்டுக்கல் பழனி ரோட்டில் உள்ள கோபாலசமுத்திரம் கரையில் கோபால் நாயக்கர் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவ படத்திற்கு பழனி சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு மாவட்ட செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் மலர் தூவி மரியாதை செய்தார்.**

# அமாவாசை முன்னிட்டு பக்தர்கள் நீராட தடை பொதுமக்கள் இன்றி வெறிச்சோடிய ராமேசுவரம்

*ராமேசுவரம், செப். 08 2021:* ராமேசுவரத்தில் ஆவணி மாத சர்வ அமாவாசை முன்னிட்டு பக்தர்கள் அக்னி தீர்த்த கடலில் நீராட தடை விதிக்கப்பட்டதால் பொதுமக்கள் இன்றி ராமேசுவரம் திங்கட்கிழமை வெறிச்சொடி கானப்பட்டது.



ராமநாதபுரம் மாவட்டம், ராமேசவரம் ராமநாதசுவாமி கோயில் இந்துக்களில் தீர்த்த மூர்த்தி புனித ஸ்தலமாக விளங்கி வருகிறது. அக்னி தீர்த்த கடலில் நீராடி கோயிலுக்குள் உள்ள 22 தீர்த்தங்களில் நீராடிய பின் கங்கை நீரால் சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்தால் பாவவிமோட்சனம் கிடைக்கும் என்பது இந்துக்களின் ஐதிகம். இதனால் ராமேசுவரம் கோயிலில் அமாவாசை நாட்களில் நம்மோடு வாழ்த்து மறைந்த முன்னோருகளுக்கு திதி கொடுத்து வழிபாடு செய்வதால் புண்ணியம் கிடைக்கும் என்பதால் அமாவாசை நாட்களில் ராமேசுவரம் வருகின்றனர். மேலும் ஆடிஅமாவாசை, தை அமாவாசை, மஹாளாய அமாவாசை, மற்றும் ஆவணி மாத சர்வ அமாவாசை போன்ற நாட்களில் அதிகளவில் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் ராமேசுவரம் வருகை தருகின்றனர்.

இந்த நிலையில், கரோனா நோய் பரவல் தடுப்பு நடவடிக்கை காரணமாக திங்கட்கிழமை அமாவாசை முன்னிட்டு ராமேசுவரத்திற்கு பக்தர்கள் வருகை தர மாவட்ட நிர்வாகம் தடை விதித்தது. மேலும் அக்னி தீர்த்த கடலில் நீராடவும், பக்தர்கள் தரிசனம் செய்ய தடை செய்யப்பட்டது. இதனால் ராமேசுவரம் கோயில் சுற்றியுள்ள பகுதி மற்றும் அக்னிதீர்த்த கடல்பகுதியில் பக்தர்கள் இன்றி வெறிச்சொடியது. மேலும் பல்வேறு இடங்களில் போலீசார் தடுப்பு அமைத்து கண்காணித்தனர். சங்குமால் கடற்கரைக்கு வந்த பொதுமக்கள் கடலில் நீராடி ராமநாதசுவாமி கோயில் வெளியே நின்று தீபம் ஏற்றி வழிபாடு செய்து சென்றனர்.

# திண்டிவனம் அருகே கயிற்றில் தொங்கியபடி ஆண் பிணம் கொலையா? தற்கொலையா? மயிலம் போலீசார் விசாரணை

*திண்டிவனம், செப். 08 2021:* திண்டிவனம் அருகே மாடிப்படிக்கட்டில் கைப்பிடி சுவற்றில் கயிற்றில் தொங்கியபடி கிடந்த ஆண் பிரேதத்தை மயிலம் போலீசார் கைப்பற்றி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம், நாகலாபுரம் குளத்து தெரு பகுதியை சேர்ந்தவர் சீனிவாசன். இவரது மகன் மணி இவர் கடந்த சில மாதங்களாக கூட்டேரிப்பட்டு பகுதியில் இருந்து வருகிறார்.



கிருபாலட்சுமி, சப்-இன்ஸ்பெக்டர் செந்தில்குமார் உள்ளிட்ட போலீசார், தொங்க விட்டனரா? என விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அம்மாவாசையை முன்னிட்டு பேரூர் மருதமலை உள்ளிட்ட 4 கோவில்கள் பக்தர்களின்றி வெறிச்சோடி காணப்பட்டன

*கோவை, செப்டம்பர் 08 2021:* அம்மாவாசையை முன்னிட்டு அதிக கூட்டம் கூடுவதைத் தவிர்க்க பேரூர், மருதமலை உள்ளிட்ட 4 கோயில்களில் பக்தர்களுக்கு அனுமதி இல்லை. என கோவை மாவட்ட ஆட்சியர் ஜி.எஸ்.சமீரன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில், கோரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையாகக் கோயில்களில் கூட்டம் கூடுவதைத் தவிர்க்கும் வகையில் வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் கோயில் நடை மூடப்படும் என்பன உள்ளிட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதுதவிர, கோவை மாவட்டத்தில் அதிகரித்து வரும் கரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் கடந்த 1-ம் தேதி முதல் கூடுதல் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அமாவாசை நாளான செப்டம்பர் 6-ம் தேதி கோயில்களில் அதிக கூட்டம் கூடுவதைத் தவிர்க்கும் வகையில் பேரூர் பட்டீஸ்வரசுவாமி கோயில், மருதமலை சுப்பிரமணியசுவாமி கோயில், தேக்கம்பட்டி வனபத்ரகாளியம்மன் கோயில், ஆனைமலை மாசாணியம்மன் கோயில் ஆகிய கோயில்களில் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய அனுமதி இல்லை. இந்தக் கோயில்களில் சுவாமிக்கு நடைபெறும் பூஜைகள் தொடர்ந்து நடைபெறும்" என்று ஆட்சியர் ஜி.எஸ்.சமீரன் தெரிவித்தார். இதனடிப்படையில் காவல்துறையினர் துரிதமாக செயல்பட்டு பக்தர்கள் வருகையை தடுத்தனர். இதனால் கோவில்களில் பக்தர்கள் கூட்டம் இல்லாமல் வெறிச்சோடி காணப்பட்டன.

# டாஸ்மாக் ஊழியர்களின் கோரிக்கைகளை சட்டமன்ற கூட்டத்தில் உடனே நிறைவேற்ற வேண்டும் என ஆர்ப்பாட்டம்

*கோவை, செப்டம்பர் 08 2021:* கோவை பாரதீய டாஸ்மாக் தொழிலாளர்கள் சங்கம் சார்பாக பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பீளமேடு டாஸ்மாக் முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகம் முன்பாக நடைபெற்ற இதில், பாரதீய டாஸ்மாக் தொழிலாளர் சங்கத்தின் மாநில தலைவர் வி.கே.டி.சுரேஷ் தலைமை தாங்கினார். கோவை மாவட்ட தலைவர் கோபால் மற்றும் அமைப்பு செயலாளர் முருகேசன், மாநில துணை பொருளாளர் சண்முக வேல் மணிகண்டன், மாநில துணை செயலாளர் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் கடந்த 18 ஆண்டுகளாக டாஸ்மாக் சில்லறை விற்பனை கடைகளில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களையும் பணி நிரந்தரம் மற்றும் அடிப்படை சம்பளம் நிர்ணயம் செய்ய வேண்டும், டாஸ்மாக் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் களுக்கு இஎஸ்ஐ மருத்துவமனையில்



சிகிச்சை பெற வசதிகள் செய்து கொடுக்க வேண்டும், டாஸ்மாக் கடைகளில் பணிபுரியும் ஊழியர்கள் பாதுகாப்பு கருதி, பணி நேரத்தை பகல் 12 மணி முதல் இரவு 8 மணி வரை அமல்படுத்த வேண்டும், மேலும் சிறு சிறு காரணங்களுக்காக பணி நீக்கம் ஊழியர்களுக்கு மீண்டும் பணி வழங்க வேண்டும், கொரோனாவால் உயிரிழந்த டாஸ்மாக் ஊழியர்களின் குடும்பத்திற்கு நிவாரண நிதியாக ரூபாய் 50 லட்சம் வழங்க வேண்டும் மற்றும் அவர்களது வாரிசுகளுக்கு அரசு பணி வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. இதில் பி.எம்.எஸ். மாநில செயற்குழு உறுப்பினர் சிதம்பரம் சாமி செய்தியாளர்களிடம் கூறுகையில், டாஸ்மாக் ஊழியர்களின் கோரிக்கைளை நடந்து வரும் சட்டமன்ற கூட்டதொடரிலேயே நிறைவேற்ற தமிழக அரசு முன்வரவேண்டும் என கோரிக்கை விடுத்தார். ஆர்ப்பாட்டத்தில், அருள் பிரதீப் குமார், கோவை மாவட்ட பாரதீய டாஸ்மாக் தொழிலாளர் சங்க நிர்வாகிகள் சதீஸ்குமார், செல்வராஜ் உட்பட பொறுப்பாளர்கள், உறுப்பினர் கள் என பலர் கலந்து கொண்டனர்.

# ஐசிஐசிஐ வங்கியின் ஐமொபைல் பே செயலி மூலமாக, எந்த வங்கியைச் சேர்ந்த கடன் அட்டை பாக்கியையும் உடனடியாகச் செலுத்தலாம்!

*சென்னை, செப்டம்பர் 08 2021:* எந்த வங்கியைச் சேர்ந்த கடன் அட்டைகளை வைத்திருந்தாலும், மில்லியன்கணக்கான சேமிப்பு கணக்கு வாடிக்கையாளர்கள் தங்களது 'ஐமொபைல் பே 'செயலியைப் பயன்படுத்தி உடனடியாக கடன் பாக்கியைச் செலுத்த முடியும் என அறிவிப்பு வெளியிட்டுள்ளது. ஐசிஐசிஐ வங்கி எந்த வங்கியைச் சேர்ந்த கடன் அட்டைகளையும், வாடிக்கையாளர்கள் சில நொடிகளில் இந்த செயலியுடன் இணைத்து, அதன் வழியே தங்களது கடன் பாக்கிகளை செலுத்த முடியும். ஒரு பாதுகாப்பான முறையில் அனைத்து கடன் அட்டைகளையும் எளிதாக நிர்வகிக்கும் ஒற்றை தீர்வினை வழங்குவதன் மூலமாக, பல்வேறு கடன் அட்டைகளைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களின் வசதியை மேம்படுத்துகிறது.





பல்வேறு அட்டைகளின் கடன் பாக்கியைச் செலுத்துவதற்காகவும், அதனை நிர்வகிப்பதற்காகவும் எண்ணற்ற இணையதளங்களைப் பார்வையிடுவதில் வாடிக்கையாளர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை நீக்குகிறது. இந்த புதிய அம்சம். மேலும் பணம் செலுத்துவதற்கான நினைவூட்டிகளை அமைப்பது, அனைத்து அட்டைகளிலும் ஏற்கனவே செலுத்திய கட்டண விவரங்களைப் பார்வையிடுவது, வாட்ஸ்அப் மூலமாக பணம் செலுத்தியதற்கான உறுதிப்படுத்துதலைப் பகிர்வது, தங்களது அட்டைகளின் கட்டணம் செலுத்தும் சுழற்சியின் அடிப்படையில் பாக்கி கட்டணத்தைச் செலுத்துவதற்கான தேதிகளை மாற்றுவது, நிர்வகிப்பது போன்றவற்றை வாடிக்கையாளர்கள் செயல்படுத்த முடியும்.

இந்த திட்டம் பற்றி ஐசிஐசிஐ வங்கியின் டிஜிட்டல் சேனல்ஸ் & பார்ட்னர்ஷிப் பிரிவு தலைவர் பிஜித் பாஸ்கர் பேசுகையில், "எப்போதும் வாடிக்கையாளர்களின் வசதியை மேம்படுத்தும் தீர்வுகளை அறிமுகப்படுத்தி, அவர்களது வங்கி அனுபவத்தை விரிவுபடுத்தப் பாடுபடுகிறது ஐசிஐசிஐ வங்கி. சமீபத்திய மேம்பாடுகளுடன் கூடிய இதன் மொபைல் வங்கிச் செயலியில் சேர்க்கப்பட்டுள்ள இந்த புதிய அம்சம் இம்முயற்சிக்கான ஒரு சான்று. பல்வேறு தேவைகளுக்காகப் பல்வேறு அட்டைகளைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்காக, அவர்களது கடன் அட்டை பாக்கி செலுத்துதல் செயல்முறையை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது இந்த தீர்வு. ஒற்றை தளத்தில் வாடிக்கையாளர்களின் அனைத்து கடன் அட்டைகளுக்கான பாக்கியைச் செலுத்தும் ஒரேயொரு முடிவான தீர்வு வசதியை வழங்கி, கட்டணம் செலுத்துவதற்காகப் பல்வேறு தளங்களிடையே அல்லாடுவதில் இருந்து காப்பாற்றுகிறது" என்று தெரிவித்தார்.

# தமிழ் சினிமா வரலாற்றில் முதல் முறையாக டைம் லூப் அடிப்படையிலான திரைப்படமாக ஜாங்கோ தயாராகி வருகிறது

*சென்னை, செப்டம்பர் 08 2021:* எத்தனையோ வித்தியாசமான படைப்புகளை கண்டுள்ள தமிழ் திரைப்பட உலகில் புதியதோர் முயற்சியாக டைம் லூப் எனப்படும் நேர வளையம் அடிப்படையிலான திரைப்படமாக ஜாங்கோ தயாராகி வருகிறது.



இந்த படத்தை மனோ கார்த்திகேயன் எழுதி இயக்கியுள்ளார். சி வி குமாரின் திருக்குமரன் என்டர்டெயின்மென்ட், ஜென் ஸ்டுடியோவுடன் இணைந்து இந்த படத்தை தயாரித்துள்ளது.

தேனியைச் சேர்ந்த மனோ கார்த்திகேயன், இயக்குநர் இமயம் பாரதிராஜாவால் தான் சினிமாவுக்கு ஈர்க்கப்பட்டதாக கூறுகிறார்.

அறிவழகன் இயக்கிய ஈரம் மற்றும் வல்லினம் ஆகிய படங்களில் உதவி இயக்குனராகவும் ராம்குமார் இயக்கிய முண்டாசுப்பட்டியில் இணை இயக்குனராகவும் பணியாற்றியுள்ளார் மனோ கார்த்திகேயன்.

இதை தவிர்த்து சில குறும்படங்களையும் ஆவண படங்களையும் மனோ கார்த்திகேயன் இயக்கியுள்ளார்.

ஒரே நாளில் நடக்கும் சம்பவங்கள் பற்றிய படம் தான் ஜாங்கோ என்று மனோ கார்த்திகேயன் கூறுகிறார்.

"தமிழ் திரையுலகில் காலப் பயணம் (டைம் டிராவல்) அடிப்படையிலான திரைப்படங்கள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன, ஆனால் டைம் லூப் அடிப்படையிலான முதல் திரைப்படமாக ஜாங்கோ இருக்கும். குறிப்பிட்ட நாளின் நிகழ்வுகள் மீண்டும் மீண்டும் நிகழும், மேலும் அவை வித்தியாசமான திரைக்கதையுடன் சுவாரசியமான முறையில் காட்டப்படும்," என்றார்.

இந்த படத்தில் அறிமுக நடிகர் சதீஷ்குமார் மற்றும் டிக்டாக் புகழ் மிருணாளினி ரவி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

அனிதா சம்பத், ஹரீஷ் பேரடி, வேலு பிரபாகரன், கருணாகரன், ரமேஷ் திலக் மற்றும் டேனியல் அன் போப் ஆகியோரும் இந்த படத்தில் நடித்துள்ளனர்.

கார்த்திக் கே தில்லை ஒளிப்பதிவு செய்கிறார் மற்றும் சான் லோகேஷ் படத்தொகுப்பை கையாளுகிறார்.

படத்திற்கு இசை ஜிப்ரான். ஹரிச்சரண பாடிய 'அனலே அனலே' என்ற முதல் பாடல் சமீபத்தில் வெளியிடப்பட்டு, வரவேற்பை பெற்றது. இந்த பாடலுக்கு என் இதயா வரிகள் எழுதியுள்ளார். படத்தின் முழு ஆல்பம் இன்று வெளியிடப்பட்டது.



**கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தற்காலிக பட்டாசு கடை வைத்து வியாபாரம் செய்ய விரும்புவோர் தற்காலிக உரிமம் பெற இணையதளத்தின் வாயிலாக 30 -9 -2021 க்குள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் விஜய் சந்திரபானு ரெட்டி. தகவல்.**

DTP
DESIGN
All online
services
8144337349

# டாஸ்மாக் ஊழியர்களின் பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மதுரை முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகம் முன்பு பாரதிய டாஸ்மாக் பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்

*மதுரை, செப்டம்பர் 08 2021:* டாஸ்மாக் ஊழியர்களின் பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மதுரை முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகம் முன்பு பாரதிய டாஸ்மாக் பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்.





டாஸ்மாக் ஊழியர்களின் பணி நிரந்தரம், டாஸ்மாக் சில்லறை விற்பனை கடைகளில் பணிபுரியும் ஊழியர்களின் பாதுகாப்பு கருதி பணி நேரத்தை திருத்தம் செய்வது அடிப்படை சம்பளம் நிர்ணயம் செய்வது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் பாரதிய டாஸ்மாக் பணியாளர்கள் ஆர்ப்பாட்டம் நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக மதுரை அண்ணாநகரில் உள்ள மதுரை முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகம் முன்பு மதுரை பாரதிய டாஸ்மாக் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக மாநில துணைத்தலைவர் மாயவன் தலைமையில்ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஊழியர்களின் பணி நிரந்தரம் டாஸ்மாக் சில்லறை விற்பனை கடைகளில் பணிபுரியும் ஊழியர்களின் பாதுகாப்பு கருதி நேரத்தை குறைப்பது அடிப்படை சம்பளம் நிர்ணயம் செய்வது பணியாளர்களுக்கு அரசின் மருத்துவ காப்பீடு திட்டம் வசதி ஏற்படுத்துவது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மதுரை திண்டுக்கல் விருதுநகர் மதுரை தெற்கு வடக்கு உள்ளிட்ட பகுதிகளிலிருந்து டாஸ்மாக் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

HELLO Mirror MADRAS
hellomadrasdaily@gmail.com
R.DIS No: 60/2021
Daily Morning Newspaper
The Truth

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

VOLUME - 1 | CHENNAI | DAILY | 4 Pages | Wednesday, September 08, 2021 | Rs.2/- | ISSUE - 56

# Anurag Singh Thakur meets Dr. Hasan Mahmud, Minister of Information & Broadcasting of Bangladesh



New Delhi, September 08 2021: Shri Anurag Singh Thakur, Hon'ble Minister of Information & Broadcasting held a meeting with the delegation of Bangladesh led by H.E. Dr. Hasan Mahmud, Hon'ble Minister of Information & Broadcasting of Bangladesh to discuss matters of mutual interest and further the strong ties between the two countries in areas of broadcasting and entertainment, strengthening people to people contact and exploring the potential of soft power interface between the two countries. H.E. Dr. Hasan Mahmud thanked Shri Anurag Singh Thakur for hosting him and his team to discuss the matters of mutual interest and cooperation. He appreciated the pro-active steps taken by the Indian Government and made special mention of the visit of Shri Narendra Modi, the Indian Prime Minister to Bangladesh in March, 2021.

2. Anurag Thakur expressed satisfaction over the production of the movie "Bangabandhu" on the life and times of Sheikh Mujibur Rahman and mentioned "major part of the production has been completed and I expect the production be over by March, 2022, if the COVID situation so permits, so that the movie could be released internationally in March, 2022".

3. It was also agreed to pro-actively pursue production of the documentary film on "Liberation of Bangladesh in 1971". Discussions also took place on strengthening of ties between the two countries in the areas of digital entertainment and screening of films of each other's country through mutual exchange.

4. The two Ministers also discussed the celebration of "Maitri Diwas" on 6th December, 2021 for which a mutually accepted Action Plan would be detailed and carried out. Shri Thakur thanked the Government of Bangladesh for its active participation in 51st IFFI held in January, 2021 and invited renewed participation in 52nd IFFI to be held in Goa in November, 2021. Both the Ministers lent support to cooperation between the two countries for further strengthening of cultural and people to people ties.

# UCO Bank Partners with Fisdom to offer Wealth Management solutions

Chennai, 06 September, 2021: Leading Public Sector Bank, UCO Bank has partnered with FISDOM, operated by a wealth-tech start-up Finwizard Technology Pvt. Ltd. to offer wealth management products and services, beginning with mutual funds, through the Bank's m Banking Plus App to the Bank's thirty million customers.

Grand Launch ceremony was held on 31st August, 2021 in the presence of Shri Atul Kumar Goel, Hon'ble MD & CEO of UCO Bank, Shri Ajay Vyas, ED-I & Shri Ishraq Ali Khan, ED-II of UCO Bank, Shri Anand Dalmia, Co-Founder & CBO & Shri Subramanya SV, Co-founder and CEO of Fisdom.

The agreement between UCO Bank & Fisdom was executed by H K Arora, General Manager-OSD, UCO Bank and Mr. Rakesh Singh, Executive Director, Fisdom.

This strategic partnership aims at augmenting the Bank's customer value proposition by making high-quality wealth management services accessible, affordable and truly digital. The collaboration between Fisdom and UCO Bank will focus on enabling large-scale facilitation and distribution of all mutual fund schemes through UCO Bank's network of 3,000+ branches and all digital platforms.

Atul Kumar Goel, Managing Director & CEO, UCO Bank on the occasion said "Our aim has always been to continuously create greater values for our customers. With these new tie-ups we would now be offering a much wider range of Wealth products. We intend to deliver greater value through customer beneficial offerings both in terms of ease of convenience, and their features."

Ajay Vyas, Executive Director, UCO Bank said, "Customer-centricity has always been at the heart of everything we do at UCO Bank. We have a stated intent of providing a seamless digital experience and proposition across products to our customers. The endeavour is to continually leverage technology to deliver best-in-class and comprehensive product suite to cater to all our customer needs. Partnership with fisdom is a key initiative in that direction."

Ishraq Ali Khan, Executive Director, UCO Bank said, "The partnership is a key step in line with our mission to provide all financial products and services in an affordable manner while maintaining transparency. The partnership with Fisdom will enable us in offering our customers affordable and simplified digital access to essential financial products. We intend to expand the product suite significantly in the time to come."

Subramanya SV, Co-founder and CEO, Fisdom, said, "We are delighted to partner with UCO Bank and enhance wealth management experience for its customers. The evolved acceptance of the wealth products has created a systemic change among the customers to adapt the service and products we have to offer. It's our constant endeavor at Fisdom to deliver affluent experience to an enormous number of customers via variety of banks including UCO Bank."

# OPPO set to unveil OPPO Enco Buds: Battery beast offering 24hours of playtime

Chennai, September 08 2021: OPPO, the leading global smart device brand, is set to launch its new, truly wireless Enco Buds on September 8. These new entry-level buds from OPPO will offer an incredible battery experience and, crystal-clear, concert-like audio, and are built for consumers who want to upgrade to truly wireless earbuds for the first time.

Battery beast with 24 hours of playtime: To avoid frequent recharge cycles, the OPPO Enco Buds pack a powerful battery in the charging case that supports up to 24-hours of music play time. On a single charge, the Enco Buds offer consumers up to 6 hours of music listening.

Additionally, the Enco Buds boast a smart algorithm that enables Intelligent Call Noise Reduction to isolate your voice from background noise for disturbance-free phone calls. Pricing and other



details of the OPPO Enco

# Tamil Actress Sadna honored

Chennai, September 08 2021: Tamil and Telugu movie actress and model Sadna Shankar was presented with Dr APJ Abdul Kalam Award at a function held at Hotel Palmgrove by South India Social and Cultural Academy

Presenting the award, another popular Tamil actress Jyothi Meena praised the social service and community empowerment programs undertaken by Sadna. Jyothi Meena is the daughter of yesteryear popular actress Jyothi Lakshmi.

Dr H V Hande, former Health Minister and a senior politician, congratulated Sadna for getting the award and said he had known Sadna for as a child and he was proud that she is now a shining star in tinsel world and also doing her best to empower women. J Gopalan, organizer, welcome the gathering.

Sadna is acting in the lead role in Sarpagrahangal waiting for release and has done in several Telugu movies. Jyothi Meena first appeared with R Sarath Kumar in Ragasiya Police and has also appeared in supporting roles in Ullathai Allitha, Azhagana Natkal, and Gopala Gopala. She has also appeared in roles along with Ajith, Prabhu and Sarath Kumar. Jyothi Meena joined the DMK and active in



politics. She is planning to return to acting if she gets a good role.

# Community leader gets Global Community Oscars

Chennai, September 08 2021: Prominent Indian-American community leader of Houston, Texas, Sockalingam Sam Kannappan was honored with Global Community Oscar's Lifetime Achievement Award at a function in Chicago recently.

Presenting the award, Congressman Danny K Davis praised the services of Kannappan to his adopted land and said people like him make the US the greatest nation in the world, at the tenth annual international gala celebrations. The function was organized by American Multiethnic Coalition.

The prestigious tenth annual award called Community Oscars was broadcast internationally and viewed by 65 million viewers.

In his brief video speech, Kannappan said he came to the US in 1968. He mentioned names of Houston US Congressman Al Green, Congresswoman Sheila Jackson Lee and University of Houston Chancellor Dr. Renu Khator as mutual friends with Congressman Davis and who



encouraged him to do community service.

# 'Jango' - Kollywood's first time loop based film gets ready for release:

Chennai, September 08 2021: For the first time in the history of Tamil cinema, a time loop based movie titled Jango is gearing up for to impress and entertain the audience.

The film written and directed by Mano Karthikeyan is bankrolled by C V Kumar under the banner Thirukumaran Entertainment along with Zen Studios.

Mano Karthikeyan, a native of Theni says that he was drawn to cinema by veteran filmmaker Bharathiraja.

He has worked as assistant director in Eeram and Vallinam directed by Arivazhagan and co-director in Mundasupatti helmed by Ramkumar. Mano Karthikeyan has also directed a few short films.

Speaking about Jango, Mano Karthikeyan said that the movie is about incidents that take place in a single day.

"The events of the particular day will keep repeating and they will be shown with a different screenplay. We have time travel based movies in Kollywood, but Jango will be first of its kind time loop based science-fiction flick," he said.

The film has debutant Satheesh Kumar and TikTok fame Mrinalini Ravi in the lead roles.

Star cast of the film also includes Anitha Sampath, Hareesh Peradi, Velu Prabhakaran, Karunakaran, Ramesh Tilak and Daniel



Anne Pope among others.

Karthik K Thillai handles the cinematography and editing is by San Lokesh.

Music for the movie is by Ghibran. First single from the flick titled 'Anale Anale' crooned by Haricharan was released recently and got appreciation from various quarters. N Idhaya has penned the lyrics for the song. The full album was released today.

# How to convert your purchase to an EMI via SBI Debit card

Chennai, September 08 2021: SBI offers EMI facility for its customers using SBI debit card to purchase consumer durables from merchant stores by swiping their cards at POS. They can also avail this facility while buying online via e-commerce portals such as Amazon & Flipkart through SBI debit card.

Features & benefits:

Zero processing fee

Zero documentation & instant disbursal

No blocking of Savings account balance

A Standing Instruction equivalent to the monthly instalment amount will be set up on customers' savings bank account automatically upon availing this facility.

Customers can avail Debit Card EMI & Online EMI using the following steps:

Debit Card EMI

Swipe SBI Debit Card on POS Machine at merchant store

Select - Brand EMI - Bank EMI

Enter - Amount - Repayment tenor

Enter PIN and press OK after the POS machine has checked the eligibility

Loan amount is booked after the successful transaction

Charge slip containing Terms & Conditions of Loan is printed and the customer has to sign on the same

Online EMI

Login on Amazon or Flipkart from the mobile no. registered with the bank

Select the required brand article and proceed for payment

Select the Easy EMI option from different payment options that appear and then select SBI

The amount is auto fetched, enter the tenor and click on proceed

SBI Login page appears, enter the internet banking or Debit Card credentials

Loan is booked, terms & conditions (T&C) is displayed, if accepted, the order is booked

Loan amount and interest rate: Customers can avail the loan ranging from Rs. 8000 to Rs. 1 lakh at an effective interest rate of 2 year MCLR + 7.50% which is 14.70% at present.

# Pay dues of credit cards of any bank instantly with ICICI Bank's iMobile Pay app

Chennai, September 08 2021: ICICI Bank today announced that it has enabled millions of its savings account customers to pay and manage dues of credit cards of any bank instantly using the Bank's mobile application 'iMobile Pay'. The customers can add credit cards of any bank to the app within a few seconds and thereafter pay and manage their dues from the same app. It offers improved convenience to customers, who typically use multiple credit cards, by providing them a one-stop solution for managing all their cards with ease, in a safe and secure manner.

The new feature also eliminates the hassle of visiting numerous websites by customers to manage or pay dues of multiple cards. Additionally, customers can set bill payment reminders, view payment history of all cards, share payment confirmation through WhatsApp, and manage and change due dates as per the billing cycle of their cards.

Speaking on the initiative, Bijith Bhaskar, Head – Digital Channels & Partnership said, "ICICI Bank always strives to introduce solutions to improve the convenience of customers and enhance their banking experience. This new feature on the Bank's state-of-the-art mobile banking app is a testimony of this endeavour. With a large section of customers using multiple cards for their various needs, this new solution aims to help them decongest the process of their credit card bill payments. It offers them the convenience of a one-stop payment solution for all their credit cards on one platform, and saves them the hassle of juggling between multiple portals for payments."

Here's how customers can avail the facility:

Login to iMobile Pay and select 'Cards and Forex' section

Go to 'Other Bank Credit Card'

Tap on 'Add a card' and enter the required details

Authenticate the OTP sent on the registered mobile number and card will be added instantly

Once the card is added, it can be viewed and managed under the "Other Bank Credit Card" tab

'iMobile Pay' is the Bank's state-of-the-art mobile banking application that offers over 350 services. The Bank transformed the app, formerly known as 'iMobile', into 'iMobile Pay' in December 2020, to offer payments and banking services to customers of any bank. This first-in-the-industry initiative provided the significant convenience of interoperability, as it enabled users of any bank to link their account to the app and start making payments/transactions digitally. It also offered them access to an entire range of ICICI Bank services including savings account, home loan, credit card, personal loan among others from the comfort and safety of their home in these challenging times of the pandemic. Over the years, the banking app has been adjudged among the best in the world for its wide array of services, user-friendly functionalities and intuitive design.

Owned & Pubilshed by R.SATHYANARAYANAN from No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 26, and printed by him at chennai offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-2, Editor: R.SATHYANARAYANAN, Email: hellomadrasdaily@gmail.com. Contact: 8148231942. Subject to Chennai Court Jurisdiction